**03.02.2026**

**O.S.No.142/2012**

**பி.வா.சா. 1 : ராஜேந்திரன்**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் ஆத்தூர் டவுனில் குடியிருக்கிறேன். என்னுடைய குடும்ப அட்டை ஆதார் கார்டு அனைத்தும் ஆத்தூர் டவுனில் உள்ளது என்றால் குடும்ப அட்டை மட்டும் ஆத்தூர் வடக்கு காட்டில் உள்ளது. நான் 1954 செப்டம்பர் மாதம் 21ம் தேதி பிறந்தேன். எனது அப்பா ரங்கசாமி நாயுடு 1980ம் வருடம் இறந்தார். எனது அப்பா உயிருடன் இருக்கும் வரைக்கும் மேற்படி தாவா சொத்தில் பங்கு கேட்டு எந்த வழக்கும் போடவில்லை என்றால் சரிதான். எனது அப்பா தான் பெரியப்பா சித்தப்பா ஆகிய 3 பேரும் பிரித்து கொடுத்து விட்டார்கள். நான் பிறப்பதற்கு முன்பாகவே தனித்தனியாகத்தான் இருந்தார்கள். எனது பெரியப்பா ராமு நாயுடுவும் எனது அப்பா ரங்கசாமி நாயுடுவும் தோட்டத்தை பிரித்து கொண்டோம் என்று சொன்னால் இல்லை. அவர்கள் சுயார்ஜீதமாக சம்பாதித்து வாங்கி கொண்டார்கள். இந்த தாவா சொத்து எனது தாத்தா ராஜீ நாயுடு எப்போது வாங்கினார் என்றால் 05-07-1934 அன்று வாங்கினார். அந்த சொத்தை எனது தாத்தா முகமது ஜமாலுதின் சாகிபு என்பவரிடம் 19.03.1946ம் வருடம் அடைமானம் வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2) மேற்சொன்ன 05-07-1934 தேதியிட்ட அசல் பத்திரமும் 1909ம் வருட அசல் மூல பத்திரங்கள் என்னிடம் தான் உள்ளது. நான் சொல்வது தவறு என்றும் 19.03.1946ல் பதிவு செய்யப்பட்ட அடைமானம் பத்திரம் எழுதி கொடுத்து முகமது ஜமாலுதின் சாகிபு என்பவரிடம் ராஜீ நாயுடு கடன் வாங்கி இருந்தார் என்றும் அந்த கடனை 1964ம் ஆண்டு அடைத்து விட்டு அந்த அடைமானப்பத்திரத்தையும் 05.07.1934 தேதியிட்ட அசல் பத்திரத்தையும் அதனுடைய மூல பத்திரங்களையும் வாதி வைத்திருந்தார் என்றும் அந்த பத்திரங்களை நான் 2010ம் ஆண்டு வாதி வீட்டில் இல்லாத சமயத்தில் வாதியின் மனைவி கோவிந்தம்மாள் மற்றும்

மருமகளையும் தாக்கி விட்டு மேற்படி பத்திரங்களை எடுத்து விட்டேன் என்றும் அது சம்மந்தமாக ஆத்தூர் காவல் நிலையத்தில் வழக்கு தாக்கல் செய்து அதற்காக சிறையில் இருந்தேன் என்றால் நான் சிறையில் இருந்தது உண்மைதான். மேற்சொன்ன காரணத்திற்காக இல்லை. 1964 ம் ஆண்டு மேற்படி தாவா சொத்தின் மீது இருந்த கடடனை வாதி அடைத்து விட்டதால் என் அப்பாவும் பெரியப்பாவும் தாவா சொத்துக்களை வாதியே வைத்துக்கொள்ளும்படி எழுதி கொடுத்த பதிவு செய்யாத பத்திரங்களையும் நான் எடுத்து கொண்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. மேலும் அந்த கடனை அடைத்த நாளில் இருந்தே வாதி தான் தற்போது வரை தாவா சொத்தில் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் போய் வருவது இல்லை. என்னுடைய பாகத்திற்கு நான் தான் ரசீது செலுத்தி வருகிறேன். என்னுடைய பாகத்திற்கு நான் செலுத்தி வந்த ரசீதை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. நான் எந்த ஒரு ரசீதும் செலுத்தவில்லை என்றும் தாவா சொத்தில் நான் அனுபவத்தில் இல்லை என்றும் அவ்வாறு அனுபவத்தில் இருந்திருந்தால் அனுபவத்தில் இருந்ததற்கான அனைத்து ஆவணங்களையும் கொடுத்து இருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் அனுபவத்தில் இருந்ததற்கான ஆவணத்தை நான் கொடுக்கவில்லை என்றால் பங்கே பிரிக்கவில்லை என்பதால் நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 1968 ம் ஆண்டு நாங்கள் எனது தோட்டத்திற்கு குடிபெயர்ந்துவிட்டோம். தாவா சொத்தை எனது அப்பா பராமரித்து வந்தார்.

3) வாதி எனது அப்பா இறப்பதற்கு முன்பு 1964 ல் கடனை செலுத்தியதால் தாவா சொத்தில் அவர் இருந்து வருவதால் தான் தாவா சொத்தில் அவருடைய பெயருக்கு வீட்டு வரி ரசீது முதலியவை வாதி பெயரில் செலுத்தி வருகிறது என்றால் சரியல்ல. வாதிக்கு 85-86 வயது இருக்கும். வாதி தாவா சொத்தை வாங்கிய காலத்தில் இருந்தே குடியிருந்து அனுபவித்து வருகிறார் என்றால் அனைவரும் தான் இருந்து வருகிறோம். எங்கள் தேவைக்கு வெளியே சென்று விட்டோம். 1984 வரை ஒன்றாக

தான் இருந்தோம். 1984 ல் தான் வாதி எனக்கு திருமணம் செய்து வைத்தார். எனவே மேற்படி தாவா சொத்தில் பங்கு கேட்பதற்கு எந்த விதமான உரிமையும் பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. உரிமை உள்ளது. வாதி 55 வருடங்களுக்கு மேலாக தாவா சொத்தை அனுபவித்து வருவதால் எதிரிடை அனுபவ உரிமை பாத்தியம் ஏற்பட்டுள்ளது அதனால் தாவா சொத்தில் எனக்கு எவ்வித பங்கும் இல்லை என்றும் அவருடைய அனுபவத்தை தடுப்பதற்கு எனக்கு எவ்விதமான உரிமையும் பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தாவா சொத்து வாதியின் வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.02.03 17:46:51 +0530

**Subordinate Judge, Attur.**